## பத்திரிக்கைச் செய்தி வெளியீடு

கொரோனா வைரஸ் நோய்தொற்றை தடுப்பதற்காக, அரசின் வழிகாட்டுதல்களின்படி, தேசிய பேரிடர் மேலாண்மைச்சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் கடந்த 25.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக பொதுமக்கள் திருவிழாக்கள் மற்றும் மத வழிபாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அரசாணை (நிலை) எண். 342 வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மை (DM-IV) த்துறை நாள் 08.04.2021 மற்றும் அரசாணை (நிலை) எண். 435 வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மை (DM-IV)த்துறை நாள் 03.07.2021 இன்படி தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணைகளின் அடிப்படையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில், குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144 இன்படி 5 நபர்களுக்கு மேல் பொது இடங்களில் கூடுவதற்கும் பொதுமக்கள், திருவிழாக்கள் மற்றும் மத வழிபாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைகள் ந.க.75/2020/சி2 நாள்.03.07.2021 இன்படி தடைவிதித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட உத்தரவுகளை மீறுவோர் மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 188 மற்றும் 45/1860 இன்படியும் மற்றும் பேரிடர்மேலாண்மைச்சட்டம் 2005 பிரிவு 51 மற்றும் 60 இன்படியும் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 08.08.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆடி அமாவாசையை முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் கடற்கரை, வேதாரண்யம் கடற்கரை மற்றும் கோடியக்கரை கடற்கரைகளில் தங்கள் முதாதையர்களுக்கு திதி செலுத்தும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மற்றும் அண்டை மாவட்டங்களிலிருந்தும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் வந்து கலந்துகொள்வதற்கு வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது.

ஆடி அமாவாசை நிகழ்ச்சியில் பெருமளவு பொது மக்கள் கடற்கரைகளில் கூடும் பட்சத்தில் அரசு வழங்கியுள்ள கொரோனா பெருந்தொற்றுநோய் குறித்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி சமூக இடைவெளி போன்ற கட்டுப்பாடுகளை பொதுமக்கள் பின்பற்றுவதில் பின்னடைவு ஏற்பட வாய்ப்புள்ளதாலும் மேலும், கொரோனா மூன்றாவது அலை பரவல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாலும் பொது மக்கள் மேற்கண்ட இடங்கள் உள்ளிட்டு மாவட்டத்தின் எந்த கடற்கரைப்பகுதிகளிலும் கடற்கரைகளில் கூடுவதற்கு 01.08.2021 முதல் 09.08.2021 வரை தடை விதித்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் அ/மி. வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோவில், திருக்குவளை வட்டம், எட்டுக்குடி அ/மி.சுப்ரமணியசுவாமி திருக்கோவில், நாகப்பட்டினம் வட்டம், சிக்கல் அ/மி.நவநீதேசுவரர் திருக்கோவில், நாகப்பட்டினம் நகரத்திலுள்ள அ/மி.நீலாயதாட்சியம்மன்

திருக்கோவில், அ/மி.சௌந்தரராஜ பெருமாள் திருக்கோவில் அ/மி. நெல்லுக்கடை மாரியம்மன் திருக்கோவில் உள்ளிட்ட முக்கிய திருக்கோவில்களில் எதிர்வரும் **01.08.2021, 02.08.2021, 03.08.2021 மற்றும் 04.08.2021 ஆகிய நான்கு நாட்களில்** நடைபெறவிருக்கும் **ஆடிக்கிருத்திகை மற்றும் ஆடிப்பெருக்கினை** முன்னிட்டு, கொரோனா நோய்த்தொற்று பரவாதிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் நலன் கருதி பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதி இல்லை. மேற்படி நாட்களில் **(01.08.2021, 02.08.2021, 03.08.2021 மற்றும் 04.08.2021) திருக்கோவில் ஆகம விதிப்படி நடைபெறும் அனைத்து** நிகழ்வுகளும் திருக்கோவில் பணியாளர்கள் மூலம் நடைபெறும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடைமடைப் பகுதியில் பாய்ந்துவரும் காவிரி ஆற்றின் கிளை ஆறுகளின் கரைகளில் பொதுமக்கள் கூடி வழிபாடு செய்வதற்கும், கூடுவதற்கும் அனுமதியில்லை என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்.அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் அறிவிக்கிறார்.